DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 237/2025

Miscellaneous :

Deposition of Witness for : PW –3

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | விநாயகம் |
| Father / Husband Name | ஆறுமுகம் |
| Village | |
| Taluk | |
| Age | |

**Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 03.03.2026**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது வீராணகுன்னம் கிராமத்தில் வசித்து பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். நான் எனது ஊரில் புதிதாக வீடு கட்டியுள்ளேன். ஆஜர் எதிரிகள் என் வீட்டின் எதிரே வசிக்கிறார்கள். எதிரிகள் அவர்களுடைய வீட்டின் செப்டிக்டேங் தண்ணீர் மற்றும் கழிவு நீர் தண்ணீரை எங்கள் வீட்டின் செப்டிக்டேங்கில் விட்டார்கள். 30.05.2025 அன்று மாலை 7.00 மணியளவில் சலோமியா என்பவரிடம் கேட்டேன். அப்போது பேசிக்கொண்டிருக்கும்போது சலோமியா, தேவி மற்றும் இரண்டு பெண்கள் என்னுடைய கை, கால்களை பிடித்துக்கொண்டார்கள். அப்போது எதிரி சுந்தரமூர்த்தி என்பவர் தண்ணீர் பைப்பால் என் தலையில் அடித்துவிட்டார். அதை தடுக்க வந்த என் மனைவி நீலா மற்றும் மகள் கௌசல்யா என்பவரை எதிரிகள் அடித்து கீழே தள்ளி என் மகளின் நைட்டியை கிழித்துவிட்டார்கள்.

2. மேலும் எதிரிகள் என்னை பொட்டை, பாடு என்று அசிங்கமாக பேசி, அந்த செப்டிக் டேங்கில் தான் தண்ணீரை விடுவோம் யாரும் எங்களை ஒன்றும் செய்யமுடியாது என்று கூறினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகார் வாக்குமூலத்தை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் வாக்குமூலம் அசாஆ1ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

3. சம்பவம் நான் புதிதாக கட்டிய வீட்டின் முன்பு நடந்தது. சம்பவம் நடக்கும்போது எத்தனை பேர் பார்த்தார்கள் என்றால் நிரையபேர் இருந்தார்கள். இந்த சம்பவத்திற்கு முன்பு நாங்களும் எதிரிகளும் நட்புறவாக தான் இருந்தோம் என்றால் இல்லை. சண்டை சுமார் 2 மணிநேரம் நடந்தது. ஆம்புலன்ஸ் பஸ்டான்டிற்கு தான் வந்தது. ஆம்புலன்ஸ் வரும்போது சுமார் 9 மணி இருக்கும். மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சுமார் 9.30 மணிக்கு வந்தோம். புகாரை எப்போது கொடுத்தேன் என்றால் 1ம் தேதி காலை 9.00 மணியளவில் மருத்துவமனையில் வைத்து கொடுத்தேன். புகாரை நான் எழுதிக்கொடுத்தேனா என்றால், நான் சொன்னதை

போலிசார் எழுதினார்கள். நான் எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்றேன் என்றால் 10.00 மணியளவில் காவல் நிலையம் சென்றேன்.

4. நான் மருத்துவமனையில் ஒரு புகாரும், காவல் நிலையத்தில் ஒரு புகாரும் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகிதான் காவல் நிலையம் சென்றேன். என் மனைவி மற்றும் மகள் ஆகியோரும் மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார்கள். நானும் என் மனைவியும் காவல் நிலையம் சென்றோம். என் மகள் காவல் நிலையம் வரவில்லை. காவல் நிலையத்தில் அளித்த புகாரை என் வழக்கறிஞர் காவல் நிலையத்தில் வைத்து எழுதிக்கொடுத்தார். போலிசார் என்னை 2ம் தேதி மதியம் 2.00 மணியளவில் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். எனக்கு தலையில் இடது பக்கம் அடிப்பட்டது. எனது மனைவிக்கும் மகளுக்கும் எங்கு அடிபட்டது என்று தெரியாது.

5. நான் மருத்துவமனையில் யார் யார் அடித்தார்கள் என்று சொன்னேனா என்றால் என்னை நான்கு பேர் பிடித்துக்கொண்டார்கள், ஒருவர் தான் அடித்தார் என்று சொன்னேன். போலிசார் விசாரணையில் நான்கு பேர் கை, கால்களை பிடித்துக்கொண்டார்கள், ஒருவர் தான் அடித்தார் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரிகள் அடித்ததாக கூறும் பைப்பபை போலிசாரிடம் காட்டினேனா என்றால் அதை அவர்களே எடுத்துச்சென்றுவிட்டார்கள். என்னுடைய மகளின் நைட்டியை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் நான் காட்டினேன். நான் தீபாவளி பண்ட் பிடித்தேன் என்றாலும், அதில் சலோமியாவும் சேர்ந்தார் என்றாலும் சரிதான். அந்த பண்டில் சுமார் 10 பேர் சேர்ந்தார்கள். அந்த பண்டுக்கான தொகையை தற்போது வரை சலோமியாவிடம் திருப்பிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதை நான் சென்ற வருடமே கொடுத்துவிட்டேன்.

6. நான் பண்டுக்கான பணத்தை தற்போது வரை கொடுக்கவில்லை என்றாலும், பண்டு தொகையை கேட்டபோது எதிரிகளுக்கு எதிராக பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 237/2025

Miscellaneous :

Deposition of Witness for : PW –4

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | கௌசல்யா |
| Father / Husband Name | விநாயகம் |
| Village | |
| Taluk | |
| Age | |

**Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 03.03.2026**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது வீராணகுன்னம் கிராமத்தில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். 30.05.2025 ம் தேதி மாலை சுமார் 6.00 மணிக்கு மேல் என் அப்பாவை சுந்தரமூர்த்தி, சலோமியா, ஏழுமலை, ரவி ஆகியோர் அடித்தார்கள். அப்போது சண்டை பெரிதானதால் நானும் என் அம்மாவும் சென்றோம். அப்போது சுந்தரமூர்த்தி என்பவர் என்னுடைய நைட்டியை பிடித்து இழுத்து அடித்தார். சலோமியாவும், தேவி என்பவரும் என் அப்பாவின் கையை பிடித்துக்கொண்டார்கள், சுந்தரமூர்த்தி என் அப்பாவை இரும்பு தண்ணீர் பைப்பால் அடித்தார். சண்டையின் போது நான் கையில் என் அக்காவின் குழந்தையை வைத்திருந்தேன், சலோமியா என்பவர் ஜல்லி கல்லால் என்னை அடித்தார். அது குழந்தைமேல் பட்டால் என்ன ஆகும் என்று கேட்டேன். அதற்கு அவர் குழந்தை என்ன செத்தா போகும் என்று கேட்டார்.

2. அவர்கள் வீட்டின் சாக்கடை தண்ணீரை எங்கள் வீட்டு செப்டிக் டேங்கின் மீது விடுகிறார்கள், அதை கேட்டதால் சண்டைக்கு வருகிறார்கள். மேற்படி சம்பவம் தொடர்பாக என் அப்பா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**3.** சண்டையின் போது நான் கையில் என் அக்காவின் குழந்தையை வைத்திருந்தேன், சலோமியா என்பவர் ஜல்லி கல்லால் என்னை அடித்தார். அது குழந்தைமேல் பட்டால் என்ன ஆகும் என்று கேட்டேன். அதற்கு அவர் குழந்தை என்ன செத்தா போகும் என்று கேட்டார் என்ற விவரத்தை நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்தபோது எவ்வளவு தூரத்தில் இருந்தேன் என்றால் சுமார 2 அடி தூரத்தில் தான் இருந்தேன். சம்பவம் எங்கு நடந்தது என்றால் எங்கள் வீடும் எதிரிகளின் வீடும் எதிரெதிர் வீடுதான். சண்டை இரு வீட்டிற்கும் நடுவில் ரோட்டில் நடந்தது. என்னை சுந்தரமூர்த்தி மட்டும் தான் அடித்தார் என்றாலும், மற்ற மூன்று பேரும் அடிக்கவில்லை என்றால் சரிதான். எதிரி என்னை வலது கையில் அடித்தார். நாங்கள் 9.00 மணிக்கு ஆம்புலன்ஸில்

மருத்துவமனைக்கு சென்றோம். நாங்கள் வீராணக்குன்னத்தில் இருந்து பஸ்டான்டிற்கு கேப்–ல் வந்தோம்.

4. நான் புகார் கொடுக்க காவல் நிலையம் செல்லவில்லை. நான் எப்போது மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆனேன் என்றால் மறுநாள் காலையில் வீட்டிற்கு வந்துவிட்டேன். மீண்டும் மருத்துவமனைக்கு சென்றேன். சாட்சி தற்போது மீண்டும் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்று கூறுகிறார். சாட்சி தற்போது மீண்டும் மருத்துவமனைக்கு வந்ததாக கூறுகிறார். போலிசார் என்னை மறுநாள் மதியம் 1 மணிக்கு மேல் மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள். சம்பவத்தை சுமார் 10 பேருக்கு மேல் பார்த்தார்கள். எதிரி என் வீட்டின் எதிரே வசிப்பவர்கள் என்பதால் எனக்கு நன்கு பழக்கமானவர்கள் என்றால் இல்லை.

5. நாங்கள் தீபாவளி பண்ட் பிடிப்போம் என்றால் சரிதான், அதற்கான பணத்தை தற்போது வரை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பண்டுக்கான பணத்தை தற்போது வரை கொடுக்கவில்லை என்றாலும், பண்டு தொகையை கேட்டபோது எதிரிகளுக்கு எதிராக பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 237/2025
Miscellaneous :
Deposition of Witness for : PW –5

**எதிரிகள் ஆஜர்**

| Name | சேகர் |
|---|---|
| Father / Husband Name | ஏழுமலை |
| Village | |
| Taluk | |
| Age | |

**Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 03.03.2026**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது வீராணகுன்னம் கிராமத்தில் வசித்து டேங்க் ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன். எதிரிகள் வீடும் புகார்தாரர் வீடும் எதிரெதிரே உள்ளது. இருதரப்பினருக்கும் கழிவு நீர் விடுவது தொடர்பாக அடிக்கடி சண்டை வரும். நாங்கள் பலமுறை எடுத்துக்கூறி இருதரப்பினரும் சண்டைபோட்டுக்கொள்வார்கள். இந்த நிலையில் கடந்த 30.05.2025 ம் தேதி இருதரப்பினரும் அடித்துக்கொண்டார்கள், அதில் விநாயகம் என்பவருக்கு தலையில் அடிபட்டுவிட்டது. நாங்கள் சண்டையை மடக்கிவிட்டு அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. சம்பவம் நடந்த போது நான் சுமார் 20 அடி தூரத்தில்தான் இருந்தேன். நான் அரசு ஊழியர் என்றால் சரிதான். சண்டை நடந்த இடத்தின் அருகே என்னுடைய வீடு உள்ளது. சண்டையை சுமார் 20 பேருக்கு மேல் பார்த்தோம். போலிசார் என்னிடம் கையெழுத்து எதுவும் வாங்கினார்களா என்றால் மறுநாள் வந்து விசாரணை செய்து வாங்கினார்கள். என்னிடமும், பிச்சைமுத்து மற்றும் குப்பன் ஆகியோரிடமும் வாங்கினார்கள். கையொப்பம் வாங்கிய ஆணத்தில் என்ன விவரங்கள் இருந்தது என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியாது. கையெழுத்து வாங்கிய பிறகு போலிசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. போலிசார் வரைந்த வரைபடம் பற்றி விவரம் தெரியுமா என்றால் எங்களை தெருவை வரைந்தார்கள்.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 237/2025

Miscellaneous :

Deposition of Witness for : PW –6

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | குப்பன் |
| Father / Husband Name | சொக்கலிங்கம் |
| Village | |
| Taluk | |
| Age | |

**Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 03.03.2026**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது வீராணகுன்னம் கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகமில்லை. விநாயகம் என்பவருக்கும் யாருக்கோ சண்டை நடந்ததாக சொன்னார்கள். மறுநாள் என் சித்தப்பா வீட்டிற்கு செல்லும்போது போலிசார் படம் வரைந்து விசாரணை செய்தார்கள். படம் வரைந்ததற்காக சாட்சி கையொப்பம் கேட்டார்கள், நான் போட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. நான் எப்போது கையொப்பம் செய்தேன் என்றால் சம்பவம் நடந்த மறுநான் கையொப்பம்போட்டேன். நான் மட்டும் தான் கையொப்பம் போட்டேனா என்றால் சாட்சி சேகரும் போட்டார். நான் எழுதிய பேப்பரில் தான் கையொப்பம் போட்டேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் கையொப்பம் செய்த பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.